# தென்றல்

ஆரம்பம் : 06.04.2008 பதிவு இலக்கம் : 361910

காற்று : 15 சுகந்தம் : 53 (சித்திரை- ஆனி) - 2022




கலாபூஷணம்
தம்பி சாகித் சித்தி பரிதா

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!

ஆரம்பம் : 06. 04. 2008

# தென்றல்
# THENDRAL

44/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
தொ.பே: 0776983597
பெக்ஸ்: 0652227542
E-Mail :kirupabatticaloa@yahoo.com
இணையம் : www.Thendralbook.com

**ஆசிரியர்/ வெளியீட்டாளர்**
**க.கிருபாகரன்**

**ஆசிரியர் குழு**
கலாபூஷணம் மு.தம்பிப்பிள்ளை
கலாபூஷணம் இ.கோபாலபிள்ளை
திருமதி.கவிதா கிருபாகரன்
கலாபூஷணம் ஆ.அரசரெத்தினம்
செல்வி த. செல்வராணி
**ஓவியம்**
**சி.புரவர்த்தனி**

ஆக்கங்களுக்கு ஆக்கியோரே பொறுப்பாளிகளாவர் ( ஆ-ர் )

# உள்ளே..

- **ஆசிரியர் கருத்து** .............. 2
- **தென்றலின் தேடல்** ........... 3
- **கவிதைகள்**
  1. தமிழ் வளர்ச்சி .............. 7
  2. அகவை பதினைந்தில் கால் பதிக்கும் தென்றலே பல்லாண்டு வாழ்க!....... 17
  3. அகிலம் போற்றும் தென்றல் வாழ்க ........... 21
  4. கொடிது கொடிது கொவிட்-19 ................... 28
  5. சித்திரைப் புத்தாண்டு .... 34
  6. திருப்பம் தரும் தேடல்கள் .................. 16
- **சிறுகதைகள்**
  1. சுமைகள் தந்த சுகம்....... 8
  2. குடைக்குள் மழை......... 22
  3. ஏமாற்றுக்கருவி............ 35
- **கட்டுரை**
  அறியப்படாத ஆளுமை இலங்கை மலையக கானகநிலா கல்லிடைக் குறிச்சியார் ..... 18
- **அரங்கேறிய கலை, கலாசார நிகழ்வுகள்** ..................... 29
- **நீத்தார் நினைவு** ............... 38
- **புதிய வரவு**....................... 39
- **வாசகர் நெஞ்சம்** ............... 40

# அகவை பதினைந்தில் கால்பதிக்கும்

# “தென்றல்”

உங்கள் அபிமானத் **“தென்றல் சஞ்சிகை”** இன்றைய தினம்(சித்திரை-6) பதினைந்தாவது அகவையில் கால்பதிக் கிறது.

பதினைந்தாவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் **“தென்றல்”**- ஆனது இன்னும் பல அகவைகளைக் கடந்து சிரஞ்சீவியாக நிலைத்து நிற்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. **“தென்றல்”**-ஐப் பொறுத்தவரையில் பல்வேறு கரடுமுரடான பாதைகளைக் கடந்து வந்து இன்று சஞ்சிகைத் துறையில் தனக்கென தனித்துவமான ஓரிடத்தினைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

ஒரு சஞ்சிகை பதினைந்தாவது அகவையில் காலடி வைப்பதென்பது சிறியதொரு விடயமல்ல. பல்வேறு தடைகள், பல்வேறு சவால்களைத் தாண்டியே இந்த வளர்ச்சிப் படிநிலைக்குத் **“தென்றல்”**-வந்துள்ளது. இந்த வளர்ச்சிக்காக அன்று தொட்டு இன்று வரை என்றுமே உறுதுணையாக வாழையடி வாழையாக செயற்பட்டு வரும் வாசகப் பெரும் மக்களுக்கும், விளம்பரங்களைத் தந்துதவும் அனுசரணை யாளர்களுக்கும், **“தென்றல்”**- மீதான குறைகளைச் சுட்டிக் காட்டி, எம்மை வளப்படுத்தும் அறிவுஜீவிகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

**“தென்றல்”** - வீறுநடை போடுவதற்கு அன்று தொட்டு இன்று வரை பேருதவி புரிந்து வரும் பெருமக்களான வாசகர் நெஞ்சங்கள் மேலும் மேலும் எமக்கு ஒத்துழைப்பை நல்க முன்வர வேண்டும். இதன்மூலம் தமிழ்பேசும் மக்களின் இதயக் குரலாக **“தென்றல்”** - தொடர்ந்தும் வீறுநடை போடும் என்பதை அறுதியும், உறுதியுமாகக் கூறிக் கொள்கின்றோம்.

என்றென்றும் அன்புடன்
-ஆசிரியர்-



# தென்றலின் தேடல்

## கலாவிபூஷணம் தம்பி சாகித் சித்திபரிதா

க.கிருபாகரன்

ஆன்மீக ஒலிபரப்பும் முத்தலம் சிறப்புப் பெற்ற முன்னேஸ்வரம் தலம் அருகில் கடல் வளமும், கவிவளமும், மூவினங்ளையும் அரவணைத்து முன்னோர்களால் முத்துக் குளிப்புக்குப் பெயர் பெற்றதே இந்த சிலாபம். அரசியல் ரீதியிலும் இன ஒற்றுமைக்கும், இன சௌயத்துக்கும் பெயர் பெற்ற சிலாபம் இன்றும் அந்நாமத்தைப் போற்றி வருகின்றது. அதை உள்ளீடாகக் கொண்டு ஆன்மீக எழுத்துத் துறையிலும், கவிபுனைவிலும் தனக்கெனத் தனியான பாதையினை வகுத்துக் கொண்டு எழுத்துத் துறையில் பிரகாசித்து வரும் **"கலாவிபூஷ ணம் தம்பி சாகித் சித்தி பரிதா "**-வைத் **"தென்றலின் தேடல்"-** வாயிலாக அறிமுகப்படுத்துவதில் **"தென்றல்"-** பெருமையும், பேருவகையும் அடைகின்றது.

### குடும்பப் பின்னணி

சிலாபம் என்றாலே சிலாபத்தை நினைவுபடுத்தும் சித்தி பரிதா 1949.03.13 ஆந் திகதி இராமநாதபுரம் கீழக்கரை ஹபிப் முகமத்தம்பி சாகிப்புக்கும்- சிலாபம் அம்பகந்தவில மரியம்பீபிக்கும் பிறந்த ஏழு செல்வங்களுள் முதல் முத்தாக முகிழ்ந்து நிற்பவரே சித்திபரிதா.

### கல்விச் செல்வம்

கல்விச் செல்வம் தளர்வடைந்தாலும், தனது முயற்சியினால் விளித்துக் கொண்ட சித்தி பரிதா தனது ஆரம்பக் கல்விச் செல்வத்தை சிலாபம் றோமன் கத்தோலிக்கத் தமிழ் பெண்கள் பாடசாலையிலும், பின்னர் சிலாபம் நஸ்ரியா மகாவித்தியாலயத்திலும் (தற்போது மத்திய கல்லூரி) எட்டாம் தரம் வரை கல்வி கற்றார்.

## வாழ்வின் பின்புலம்

எனது தகப்பனார் வர்த்தகத் துறையில் ஈடுபட்டவர். இத்தொழில் காலப்போக்கில் பின்னடைவைக் கண்டது. கஷ்டங்களால் கல்வி இடைநிறுத்தப்பட்டதால், கல்யாண பந்தத்தில் இணைந்து கொண்டேன். வறுமையின் மத்தியில் வாழ்வுப் பயணம் தொடர்ந்தது. இதன் மத்தியில் வாசிப்புப் பழக்கம் என்னை விட்டு விடவில்லை. துண்டுப் பேப்பர்களை நுகர்வேன். தகப்பனார் வாங்கி வரும் தென்னிந்திய சஞ்சிகைகள், பத்திரிகைகளை வாசிப்பதில் பின்நிற்பதில்லை. இப்பழக்கம் அவ்வப்போது எழுதுவதற்கு என்னைத் தூண்டியது. இத்தகைய நிலையை ஏற்படுத்திய தகப்பனாரை எண்ணிப் பார்க்கிறேன்.

அத்துடன் தனது சிறிய தகப்பன் க.மு.ஹபிப் முகம்மது சுல்தான் மரைக்காரின் உதவி மற்றும் ஒத்தாசை என்பன எனக்கு உத்வேகத்தை அளித்ததுடன், எனது முயற்சிக்கு ஊன்று கோலாக அமைந்திருந்ததையும் குறிப்பிட்டாக வேண்டும்.

## இலக்கிய வளர்ச்சிப்படி

- எனது முதலாவது கட்டுரையான **“குரானின் சுருக்கத்தின் கண்ணோட்டம்”** - 29.01.2017 அன்று வீரகேசரியில் பிரசுரமானது. இது எழுத்துத் துறைக்கான அத்திவாரமாக அமைந்தது.
- **“கலிமா தைய்யிபாவின் மகிமை”** மற்றும் **“தஸ்பி ஹுத் தொழுகை”-** ஆகிய கட்டுரைகள் தினகரனில் களங்கண்டன.
- **“லைலத்துல் கதிர் இரவு”**-என்ற கட்டுரையை வெள்ளி 20.06.2017 அன்று பிரசுரித்தது.
- **“விசுவாசிகள் நிச்சயம் வெற்றி அடைவார்”**, **“ஃபித்அத் பற்றிய எச்சரிக்கை”** ஆகிய கட்டுரைகளும், **“காவிய நினைவு”**- (கவிதை), **“மீண்டும் சந்திப்போம்”**-(கவிதை), **“உயிர்க்காதல்”**-(கவிதை), ஆகியவை தினகரனில் பிரசுரமாகி எனது எழுத்துக்கு அங்கீகாரம்

வழங்கியது.

- **“தெவிட்டாத தேனும், தெளிவான மருந்தும்”, “புறம் பேசித் திரிதல்”** (கவிதை), **“பிடிமானம்”**-(கவிதை) ஆகியன வீரகேசரியிலும் பிரசுரமானது.

## எழுதி வெளியிட்ட நூல்கள்

- **“இஸ்லாமிய தத்துவ முத்துக்கள்”**- 2016
- **“தித்திக்கும் திருமறையின் மகிமைகள்”**- 2017
- **“வாழ்க்கை நெறியைப் போதிக்கும் இஸ்லாம்”**- 2018
- **“இயற்கையுடன் அமைந்தது இஸ்லாம்”**- 2020
- **“மலராத மொட்டுக்கள்”**-(கவிதைத் தொகுதி)- 2021
- **“தீன்மறையின் தீன் சுவைகள்”**- 2021
- **“தாரனின் துளிர்கள்”**- 2021

## கலந்து கொண்டு நிகழ்ந்த நிகழ்வுகள்

- உதயதரினம் நேர்காணல் (இலங்கை ரூபவாஹினி)
- மாதர் மஜ்ஜிலின் செவ்வி (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்)
- இராமநாதபுரம் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கியமை.
- தென்னிந்திய கீழக்கரை அப்துல்கலாம் இல்லத்தில் இடம்பெற்ற நூல் அறிமுக நிகழ்வில் கருத்துரை வழங்கியமை.
- **“உடப்பு இளம் தாரகை வட்டம்”**-நடாத்திய நூல் வெளியீட்டில் கலந்து கொண்டு உரையாற்றியமை.
- தென்னிந்திய இராமநாதபுரம் நூல் வெளியீட்டு விழாவில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.
- உடப்பூர் வீரசொக்கனின் நூல் வெளியீடு மற்றும் சிலாபம் நஸ்ரியா மத்திய கல்லூரி நூல் வெளியீடு ஆகிய நிகழ்வுகளில் பொன்னாடை போர்த்தப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டார்.

இலங்கையின் **ஆற்றல்மிக்க மூத்த படைப்பாளிகள் பலரை இன்றைய இளம் தலைமுறையினர் கண்டுகொள்ளாமல் இருக்கின்றனர். அந்தவகையில் ஈழத்து இலக்கிய-சஞ்சிகை-இசை-நாட்டிய-நாடக-கிராமிய வைத்தியத் துறைக்குப் பெரும் பங்காற்றிய அத்தகைய இலக்கிய விருட்சங்களை** வெளி உலகுக்கு அறிமுகம் செய்யும் வகையிலேயே **தென்றலின் தேடல்-எனும் இப்பக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

- அண்மையில் சர்வதேச பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் வைத்து **"கலாவிபூஷணம்"**-விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவ்விதம் அமைதியாக, அடக்கமாக, அமைதிப்பூங்காவாக இருந்து ஆக்கபூர்வமாக இலக்கியப் பணியாற்றிவரும் சிலாபம் தம்பி சாஹிப் சித்தி பரிதாவின் இலக்கிய வளர்ச்சி பல்கிப் பரிணமிக்க **"தென்றல்"**-மனம் நிறைந்து வாழ்த்துகின்றது.

**அன்பான எழுத்தாளர்களே, கவிஞர்களே, ஊடகவியலாளர்களே உங்களிடமிருந்து தரமான கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் ஆகியன எதிர்பார்க்கப்படுகின்றன. நாம் தடைகளைத் தாண்டிப் பயணிக்க உறுதுணையாக இருந்த நீங்கள் எமக்கு தரமான விடயதானங்களை அனுப்பித் "தென்றல்"-இன் தரம் பேண உதவிடுங்கள்.**

**(ஆசிரியர்)**

-கவிதை-

# தமிழ் வளர்ச்சி!!!

-ஹாசியானி தம்பிசாஹிப் சித்தி பரீதா, சிலாபம்-

எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல் புதிதாக இயற்றுவதிலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெள உறுத்தும் படங்களோடு கவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழும் தமிழாய் செய்வதுவும் வேண்டும்
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்!

உலகியலின் அடங்கலுக்கும் துரைதோரும் நூற்கள்
ஒருதர்தையை இல்லாமல் ஊரறியும் தமிழில்
கலசலென எவ்விடத்தும் பாய்ச்சி விட, வேண்டும்
தமிழ்மொழியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்
இலவச நூற் கலங்கள் எவ்விடத்தும் வேண்டும்
எங்கள் தமிழ் உயர்வு பெற நாம் சொல்லி
தலைமுறைகள் பல களித்தோம் குறைகளைந் தோமில்லை
சுகத் தகாய தமிழைத் தாபிப்போம் வாரீர்!!!

-சிறுகதை-

# சுமைகள் தந்த சுகம்!

-உடப்பூர் வீரசொக்கன்-

கீழ்வானம் வெளுத்து இருளகற்றி கரவெளுத்துக் கொண்டிருந்தன. வெளிச்சம் வருவதைப் பறைசாற்றும் முகமாக பட்சிகள் **"கீச்.. கீச்.."**- என தத்தம் சத்த நாதங்களை உலாவ விட்டு, சிறகடித்துப் பறந்த வண்ணமிருந்தன.

தமது எதிர்காலக் கனவுகளை மேயவிட்டு, நித்திராதேவியின் அரவணைப்பில் விடுபட்டு, நடக்க இருக்கும் தொழிலைச் சிந்தித்துக் கொட்டாவி விட்டபடி, அங்கலாய்த்தவனாக வண்டியன் தீட்சண்ய பார்வையுடன் அங்கிட்டும், இங்கிட்டும் ஒருக்களித்து,

அடி குட்டக்.. குட்ட..? என்னம்மா.. இன்னமுமா படுக்கிரா.. நா.. ஒன்ன எழுப்பக் கொரவச்சி.. கொரவச்சி.. என்ற தொண்டத் தண்ணி வத்திப் போச்சிதடி..

ஆங்குட்டி.. இப்படி பொம்புள்ளங்க மல்லாக்க படுப்பது நம வூட்டுக்க ஆகாதடி.. மூதேவி வூட்டுல குடிகொண்டிடுவா.. என நம ஊர் பெரியவங்க சொல்லுவாங்கடி பெரமாத்த.

நீ வந்து இப்படி படுத்து ஒரங்குவது வூட்டுக்கு ஆவாது. குட்டி.. அடி பெரமாத்த.. அடுப்பங்கர இரிக்கும் கொள்ளி எடுத்துப் பத்த வயி குட்டி- என்றான் வண்டியன்.

இந்தா பாரு புள்ள.. இன்னிக்கு மேந்தலப்பாடு உடப்பிலிருந்து நாலு.. ஐந்து கட்டத் தூரம் நட.. வா நடந்தல்லவா போக வேண்டும்.

அது வேற.. வெருவயிற்றோட வேவு வேவென்று ஓடோடி நேரத்துடன் போய்ச் சேர வேண்டும்.

ஆனா.. அந்த மண்டாடி சின்னப் பய இரிக்கினே.. அப்பப்பா.. பொல்லாதவன். சும்மா எண்டாலும் ஏதோ தான் தனியச் செய்கிற மாதிரி நெனைப்பு.

அவன் மத்தவங்கட சொல்லக் கொஞ்சமும் கேட்கமாட்டன். கரார் பேர்வழி. தொழிலாளர்கள் சொனங்கினா போதும், பேய் மாதிறி பீறிட்டுக் கத்தி கொலைப்பான். அவன்ற புத்தி அரு.

மீன் படாவிட்டாப் போதும். சூனியம், கீனியம் செய்து மீன் பிடித்து காளியப்பன் சம்மட்டியாரை நல்ல நெலைக்குக் கொண்டு வந்தவன் இந்த வண்டியன். இதனால் நல்ல பெயர் வாங்கினான்.

ஆனால் தொழிலாளர்களுக்கு எந்தவகையான ஒதவிகளையும் செய்யாத கிள்ளாடி. எவ்வளவுதான் கஷ்டப்பட்டு மடி மடியா மீன் பிடித்துக் கொடுத்தாலும் இரக்க சிந்தனை இல்லாதவன் வண்டியன் மண்டாடி.

மீன் பட்டாப் போதும். மேப்பங்கு கொடுக்க மாட்டான். பங்குப்பணம் பிரிக்கும் போது கேள்வி கேட்பவனுக்கு சாராயம், வடிகளைக் கொடுத்து மடக்கித் தன் வசமாக்கி, வைத்துக் கொள்வான்.

மண்டாடிவண்டியன்வச்சதுதான்சட்டமும், நீதியும். மத்தவங்களுடைய துயரங்களை நினைக்காதவனான மண்டாடி.. புள்ள குட்டிக்காரன் என்று கூடப் பார்க்காதவன். கருணை காட்டமாட்டான்.

கொஞ்சத் தூரமா நடக்க வேண்டி இருக்கு. நடவா.. நட.. நடந்து என்ற கால் தழும்பு ஏறிவிட்டதடி பெரமாத்த..

கணவன் வண்டியனின் பேச்சுக்களைக் கேட்டு, உள்வாங்கியவளாகி நின்ற பெரமாத்த அரைகுறைத் தூக்கத்தில் பாசாங்குடன் கண்விழித்துக் கொண்டாள்.

குட்டக்.. குட்ட வௌக்க வையடி.. என்று வண்டியன் பீரிட்டுக் கத்திய சத்தத்திலே அப்படியும், இப்படியுமாக துயில் விட்டெழுந்த பெரமாத்த..

என்னங்க.. ஓங்களோட கொஞ்சம் நித்திரை கொள்ள முடியாதா? இப்பதா.. ஐயே.. சிவனென்று துயில் கொண்டேன்.

அந்தவிச்சிக்கு.. அதுக்குள்ள குட்ட.. குட்டயென பீரிட்டுக் கத்தி தொலைக்கிரீங்க.. மாச்சலில கொஞ்சமென்றாலும் படுக்க முடியயில்லங்க.. ஓங்களால..

அதுக்குள்ள அக்கம் பக்கம் மனிசங்களையும் படுக்க விடாமல் கத்தி எழுப்புவது ஓங்கட தலையெழுத்தாப் போச்சிதென பெரமாத்த எழும்பி, அரக்கப் பறக்க விளக்க வச்சி தேநீரைச் சுடவைத்துக் கொடுத்தாள்.

ஏ.. குட்டி பெரமாத்த..!

நா.. வெருங்குடலோடையா தோணியடிய போக, வெருங்குடலுடன் வலை இழுக்க முடியுமா? கொஞ்சம் கரிசினைப் பண்ணிப் பாரடி..

அந்தப் போக்காப் போன் மண்டாடி இருக்கிறானே.. இருபது, இருபத்தைந்து கம்மான்களை வச்சி, கரைவலைக் கோப்புடன் கரைப்பாஞ்சா எனக்குக் கரைவலை இழுக்க முடியுமா? எனக்கு நரம்பு மூட்டெல்லாம் வலுவிழந்து போச்சி பாரு.

அத்துடன் வேவாத வெயில்..! சுடு மணல். பசி வேற.. வாட்டி வதைக்கும் இந்தக் கொடுமைத் துயரை ஒனக்கிட்டச் சொல்லி ஆறுதல் பெறுகிறேன் பெரமாத்த என்றான் வண்டியன்.

என்ன செய்ய மச்சான். நம்மளப் படைச்ச கடவுள் இந்தத் துயர வாழ்க்கையைத் தந்துள்ளான். ஒரு காலம் இருளென்றால், மற்றொரு காலம் ஒளி. இருளும், ஒளியும் மாறி மாறி வருவதுதான் வாழ்க்கை என்ற தத்துவத்தை உரைக்கும்படி பெரமாத்த நாசூக்கா எடுத்து ரைத்தாள்.

அப்பவே.. நான் நாராசமாகக் கூறினேன். மதுவை விட்டு விடுங்க. நிந்தப்பணம் வாங்காதீங்க. கூடுவாருடன் கூடித் குடித்து, கும்மாளம் அடிக்காதீங்க என அசூசையாக- ஆர்த்மாத்தமாகக் கூறினேன்.

என்ற பேச்சக் கேட்டீங்களா? சம்மாட்டி காளியப்பனின் பசப்பு வார்த்தையை கேட்டீங்க. கசிப்பு சாராயத்தத் தந்து ஏமாத்தி,



கடனாளியாக வந்து நிற்கிறீங்க. தூ.. நீயெல்லாம் மனிச பிறவியில்ல. எருமைகள்.

ஏன்? நீங்க வாங்கின பணத்துக்கு வாசல்களைக் கட்டினீங்களா..? இல்லாட்டிப் பிள்ளைகளைத் தான் கரை சேர்த்தீங்களா..? நல்லாக் குடிச்சி அழித்து, கும்மாளம் போட்டீங்க. நா.. இன்று உடுத்த உடுப்பு டன் மூலியாக நிக்கிறன். அன்று நான் சொன்னதை கேட்டிருந்தால் நல்லவனாக வந்திருப்பீங்க..

ஆனால் இப்ப நிந்தக்காரன் எனச் சொல்லி வதைத்து உறிஞ்சிறான் சம்மாட்டி காளியப்பன்.

அன்று கடல் சீரில்லை. காத்து, கடல் நீர்பாடு மிக வேகமான ஓட்டம். மீன்பாடு மிகக் கம்மி. வலையில் கிடந்ததையும், சாத்தில் இருந்ததை யெல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஐஸ் போடுவதற்காக வாடிக்கு அனுப்பி விட்டார்கள் தொழிலாளிகள்.

மீன் குறைவாக அம்பிட்டதால் ஒவ்வொரு தலைக்கும் முற்பணம் அதாவது பத்து வலி முந்நூறு ரூபா கொடுத்தார் சம்மாட்டி காளியப்பன்.

இந்த கிடைத்த பணத்தைக் கொண்டு போய் என்ன செய்வது? ஏது செய்வது? என ஏங்கிக் கொண்டு நின்றான் வண்டியன். இப்பணத்தில் விஷம் போல் ஏறிக் கொண்டிருக்கும் சட்டி, முட்டி சாமான்களை வாங்கவா? கசிப்பு வாங்கிக் குடிக்கத்தான் போதுமா? என ஏங்கி ஏங்கி கொட்டாவி விட்டவனாக அங்கிலாந்து நின்றான் வண்டியன்.

அத்துடன் தனது வாழ்க்கையின் முடிந்த காலகட்டத்தையும் எண்ணி வேக்காருடன் நின்றான்.

வண்டியன் பெரமாத்தையைக் கைபிடித்த காலத்திலிருந்து முன் பின் யோசனையின்றி, நடந்து கொண்டான். புதிய மாப்பிள்ள சொல்லவா வேண்டும். குடிப்பதும், வெறிப்பதும் கூடுவாருடன் கூடி, கும்மாளம் அடிப்பதும் சொல்லி வேளையில்ல.

உழைப்பதுடன், உழைத்த பணத்தை தன்னிச்சையுடன் செலவு செய்து விடுவான். தன் இல்லத்தரசிக்கு செலவுக்குப் பணம் கொடுப்பது இல்லை.

அவ.. பாவி..! அவ என்ன செய்வாள். அக்கம் பக்கத்தில் கடன்பட்டு, ஏன் கூலி வேலை செய்து கிடைக்கும் பணத்தில் ஆக்கித் தட்டுவாள்.

அன்று வாடைக்கு பெரும் காற்றுடன், மழை சோராவாரியாக பெய்து கொட்டியது. ஊரெல்லாம் வெள்ளக் காடானது. தொடர்ந்து பெய்த மழையினால் தொழிலாளர்கள் கடலுக்குத் தொழில் செய்ய முடியாத நிலை. இதற்கு வண்டியனும் ஆளானான். நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டான்.

வண்டியன், குடித்த வெறித்த வாய், உப்புச் சப்பின்றி, புளிச்ச வாயாகி விட்டது. இந்தப் பழக்க தோசத்துக்கு உட்பட்ட வண்டியன் பெரமாத் தையிடம் கசிப்புக் குடிக்கப் பணம் தரும்படி, கெஞ்சிக் கேட்டு நின்றான்.

அவள் வண்டியனின் டாச்சரைப் பொருக்காமல் **"ஓ.. நீங்க ஒழைக்கிற ஒழைப்புக்கு குடிவேற.. பொண்டாட்டி, புள்ளங்க வேற.. நீங்க கொண்டு வர்ர சல்லி நான் என் முந்தானைச் சேலையில முடியாம இரிக்கு"**- என்றாள்.

எனக்கிட்ட இப்ப ஒரு செம்பு சல்லியும் இல்லிங்க. என தன் ஜதார்த்த நெலைய பட்டவர்த்தனமாக கூறினாள் பெரமாத்த.

**"அடியே..! கன்டாரயோளி ஒன்ட பொய்யும், பொரட்டும் எனக்குத் தெரியுமடி. அடி வேசி மவள.. ஒன்ர திமிர எனக்கிட்ட காட்டாதடி. ஒன்ற புத்தி எனக்கு நல்லாத் தெரியுமடி. காச ஒழித்து வச்சிட்டு, எனக்குத் திருவு தாளம் காட்டுறா.."**-என்று வழக்கம் போல் சாராய வெறியில் வெற்றிலையைக் குதப்பிய வண்ணம் வண்டியன் கேட்டு நின்றான்.

மனைவி பெரமாத்தவிடம் காசு கிடைக்காத கோபத்தில் வளியாச்சி சம்மாட்டியாரின் வாடி நோக்கித் தனது பயணத்தை தொடர்ந்தான். லாபகமாக தூக்கத்தில் அயர்ந்தவனாகக் காணப்பட்ட சம்மாட்டியார், வீட்டைத் தட்டி எழுப்பிய வண்ணம் வண்டியன் சம்மாட்டியார் அவரிடம் தனக்கு முற்பணமாகிய ஐம்பதாயிரம் கேட்டுப் பெற்றுக் கொண்டு, நேரே கசிப்பு சாராய வீட்டையடைந்து, மனம் குளியக் குடித்து, வெறித்த வண்டியன் தள்ளாடி..! தள்ளாடி..! கால்கள் இடறிவிழ.. அப்படியும்,

இப்படியுமாக தனது இல்லத்தைச் சென்றடைந்தான். மதுவெறி வண்டியனைத் திக்கு முக்காட வைத்தது.

அடியே.. வேசி மவள.. பெரமாத்த நா.. ஒனக்காகவும், புள்ளங்களுக்காகவும் ஒழைக்கிறேன். கஷ்டப்படுகிறேன். வேவா வெயிலில் வல இழுக்கிறன். பனியோடு, குளிரும் என்னை வாட்டி வதைக்கிறது. நா.. ஒழைக்கும் மாச்சலுக்காக அமுத பானத்தை அருந்த சல்லி கேட்டா.. தர மறுக்கிரா.. ஒன்ற புத்திய வேற காட்டுரா..

கோபம் கொண்ட வண்டியன் பெரமாத்தையை கோபா வேசத்துடன் அடிக்க எத்தனித்த போது, இதக் கண்ணுற்ற மகன் நல்லராமு கோபமுற்று தாயை அடிப்பதைக் கண்டு, அசூசை கொள்கின்றான்.

**“அப்பா.. ஓங்களுக்கு புத்தி இல்லையா..! அதுதான் இல்லாட்டி சொரணையாவது இல்லையா? மிருகங்கள் போல் வாழாமல் மனிதனாக வாழப் பழகுங்கள். குடிப்பதும், வெறிப்பதும், மானங்கெட்டு வாழ்வதும்.. மற்றும் நகைக்க எண்ணி நகைமுகம் கொள்ளுவதும் ஓங்களுக்கெல்லாம் இது ஒரு கேடா?”–** என்றுரைக்கிறான் மகன் நல்லராமு.

இக்கருத்துக்களை உள்வாங்கிய வண்டியனிடம் ரோசம் தலைக்கேறியது. தன்னைச் சுதாகரித்துக் கொண்டவனாக சபதம் எடுத்தான். இனிமேல் தம்மை அழிக்கும் கசிப்பு, சாராயம் அருந்துவதில்லையெனவும், அதைக் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லையெனவும் திடசங்கற்பம் பூண்டான். அவ்வாறு வீராப்புடன் இருந்த வண்டியன் அவ்விடத்தில் கண்ணயர்ந்து விட்டான்.

மனைவி பெரமாத்தையும், மகன் நல்லராமுவும் வண்டியனை எழுப்பி உணவு ஊட்ட எத்தனித்தார்கள். ஆனால் வண்டியன் அசையவில்லை. அவ்விடத்திலேயே நித்திராதேவி அவனை அரவணைத்துக் கொண்டாள்.

போதை வேக்காடுடன் உணவு அருந்தாமல் வெருங்குடலுடன் இருந்த வண்டியன் அங்கிட்டும், இங்கிட்டுமாகப் புரண்டு.. புரண்டு படுத்தாலும் பசி மயக்கம் அவனை வாட்டியது.

**"அடியே குட்ட..! அடியே குட்ட..! எனக்குப் பசி தாங்கமுடியல்லடி. எழும்படி பெரமாத்த எனக்குப் பசிக்குது"–** என்று தட்டி எழுப்பினான்.

சுத்தத்தையும், குரலையும் கேட்ட பெரமாத்த துடித்துப் போய் விட்டாள். பசியுடன் காணப்பட்ட வண்டியனின் நிலையை அறிந்தாள். பழம் சோற்றில் தேசிப்புளி விட்டு, கஞ்சி கரைத்து, கொடுத்தாள். வண் டியன் பழம் சோற்றினை சாப்பிட்டதும், உத்வேக உணர்வுடன் காணப் பட்டான்.

வண்டியன்.. **"குட்ட"–** இன்னிக்கு மேந்தலப் பாட்டுக்குப் போக வேணும். பழம் சோறு இருந்தா.. கட்டிச் சோத்தக் கஞ்சி வாளியில் கட்டித் தாரியா.. மத்தியானம் ஆனால் எனக்கு தலகீர்ரெங்குது. ஒடம்பு நடுங்கிது. சுடுமணலில் வல இழுக்க முடியல்லியடி. கால் தள்ளாடுது. தலசுத்துது எனத் தன் நிலைப்பாட்டை பெரமாத்தையின் மனதில் பதியும்படி பவ்வியமாக எடுத்துரைத்தான்.

மனையாள் கட்டிக் கொடுத்த கஞ்சி வாளியுடன் பாதையடி விரைந்த வண்டியன், தன் மனதில் ஊற்றெடுத்த மனஉறுதியை ஒருகணம் நினைத்துப் பார்த்தான்.

நான் இவ்வளவு காலமாக வாழ்க்கையை குடித்து நாசமாக்கினேன். சம்மாட்டியாரின் பசப்பு வார்த்தைக்கு ஆளாகி நிந்தப் பணத்தை வாங்கி, அடிமைப்பட்டவனாகி விட்டேன். பிள்ளை, குட்டிகளை மறந்தேன். குடியே வாழ்க்கையென்று எண்ணி நடந்தது எவ்வளவு பிழையென்பதை எண்ணி, வருந்தினான்.

இனியாவது மனைவி, பிள்ளைகளுக்காக மனிசனாக வாழ வேண்டியுள்ளது.

மனைவி சேமித்து வைத்த பணத்தை எடுத்துக் கொண்டு, வள்ளியாச்சி சம்மாட்டியார் இல்லம் நோக்கினான். கட்ட வேண்டிய நிந்தப் பணத்தைச் செலுத்திப் புது மனிதனாக வண்டியன் வருகிறான். அவன் வரவைக் கண்ணுற்ற மனைவியும், மகன் நல்லராமும் மகிழ்ச்சியில் திளைத்து நின்றனர்.

(யாவும் கற்பனை)

............................................................................

-கவிதை-

# திருப்பம் தரும் தேடல்கள்!

-கவியரசன் ம.குமார்-

**மு**ம் மொழிப் பரவலாக்கம்
முக்கியம்!
அம்மாவும் அப்பாவும்
தெய்வம்!
நால்வகை மதமும்
மகத்துவம்!
அவ்வழிப் போதனைகள்
தத்துவம்!
ஆன்மீக நெறிமுறை
அற்புதம்!
அமைதி வாழ்க்கைக்கு
ஔடதம்!
திருக்குறள் நல்வாழ்வுக்கு
திருப்பம்!
தேடலில் வாசிப்பே
திரவியம்!
ஐம்பெரும் காப்பியம்
பொக்கிஷம்!
நம்பிக்கை ஒளிதரும்
நட்சத்திரம்!
சாதனை படைத்தால்
சரித்திரம்!
சோம்பலை வளர்த்தால்
தரித்திரம்!
உழைத்துண்டு வாழ்ந்தால்
இன்பம்!
பிறருழைப்பில் வாழ்ந்தால்
துன்பம்!

-கவிதை-

# அகவை பதினைந்தில் கால் பதிக்கும் தென்றலே வாழ்க பல்லாண்டு!

-கவிஞர் கா.சிவலிங்கம்-

அகவை பதினான்கை இனிதே நிறைவு செய்து
அழகாய்ப் பதினைந்தில் அடியெடுத்து வைக்கின்ற
சகல கலைத்தென்றல் சிறந்த பணியாற்றி
சீர்பெற்றிலங்கியே செகமெலாம் வீசுகவே!

கலை இலக்கியப்பூஞ் சோலையினுள் ளுலவி
கண் கவரும் வண்ண மலர்களை யெல்லாந் தழுவி
தலை வருடிக் கொஞ்சி விளையாடியே சுகந்தம்
தனை அள்ளியே வந்து தென்றலே வீசுகவே!

இனிதான கவிதைகளும் சுவையான சிறுகதைகள்
இலக்கிய விருந்தாகும் இதிகாசக் கதைகளுடன்
கனிவான கட்டுரைகள் தென்றலின் தேடலுமே
களிகூரவைக்கின்ற தென்றலே வீசுகவே!

ஆசைகொண்டிலக்கிய கர்த்தாக்கள் விதைகள் நட
ஆசிரியர் உரமிட்டு வாசகர்கள் நீரூற்றி
தேசிய சிற்றிதழாய் வளர்ந்துள்ள தென்றலே
தேசமெலாம் சுற்றி வலம் வந்து வீசுகவே!

மிகுந்த பலவகையாய் மலிந்த சவால்களையும்
மன உறுதி கொண்டு முகங் கொடுத்து நின்று
தகுந்த வழியமைத்து அவற்றை முறியடித்து
தொடர்ந்து தடைதாண்டி தென்றலே வீசுகவே!

ஆண்டுக்கு நான்கு முறை தவறாது வீசி வரும்
எமதருமைத் தென்றலே இதமாக வீசுகவே!
சீண்டும் சவால்களிடை எதிர்நீச்சல் போட்டு
சுகமான தென்றலே சில்லென்று வீசுகவே!

-கட்டுரை-

# அறியப்படாதொரு ஆளுமை!
## இலங்கை மலையக "கானகநிலா"
# கல்லிடைக் குறிச்சியார்!

**-பேராசிரியர் செ. யோகராசா-**

தமிழ்மணி மானா மக்கீன் பத்தி எழுத்தாளர் என்ற விதத்திலேயே இன்றைய தலைமுறையினரால் அறியப்படுபவர். சிறுகதை எழுத்தாளர், நாடக எழுத்தாளர், நடிகர், கட்டுரையாளர் மற்றும் ஆய்வாளர் என்ற விதங்களிலான அவரது ஆற்றல்கள் அனைத்தும் **"பத்தி எழுத்தாளர்"-** என்பதனுள் முடங்கி விட்டன; முடக்கப்பட்டு விட்டன.

இத்தகையரான மானா மக்கீன் அண்மைக்காலமாக இன்னொரு துறையிலும் நுழைந்துள்ளார். அறியப்படாத ஆளுமைகளை இனங்கண்டு வெளிப்படுத்துவதே அதுவாகும். இவ்விதத்திலே சிலகாலத்திற்கு முன்னர் அவரால் இனங்காணப்பட்டவரான டி.எம். பீர்முகமது (டி.எம்.பீ) பற்றி தினக்குரலில் அவர் எழுதியவை, **"தமிழகத்து தாழை மதியவன்"-** என்பவரால் தமிழகத்தில் **"இலங்கை மலையக கானக நிலா கல்லிடைக் குறிஞ்சியார்"-** என்ற பெயரில் நூலுருப் பெற்றுள்ளது.

பீர்முகமது தமிழகம் கல்லிடைக் குறிஞ்சியிலிருந்து மலையகம் வந்து சில காலம் (1949- 1962) வாழ்ந்தவர். அக்காலத்தில் அவராற்றிய அறிந்ததும்- அறியப்படாததுமான சமூக இலக்கியப் பணிகளுள் பலவும் முழுமையான விதத்தில் அறிமுக நிலையிலும், ஆய்விற்குத் தூண்டும் விதத்திலும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

முதலில் டி.எம்.பீ. மலையக மக்கள் மத்தியிலே **"பீரங்கிப் பேச்சாளர்"-** எனப் புகழ் பெற்றிருந்தமை பற்றிப் பேசப்படுகின்றது. **"ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ்"-** என்ற புதுத் தொழிற்சங்கம் உருவான போது அச்சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு உந்து சக்தியாக விளங்கி, மலையக மக்களது உரிமைக்காகக் குரல் கொடுத்தவராகின்றார் டி.எம்.பீ. சமூக மறுமலர்ச்சிக்காகக் குரல் கொடுத்தவர் என்ற நிலையில் ஈழத்து அண்ணாவாகி இலங்கை தி.மு.க. வரலாற்றிலும் இடம்பெற்ற வராகின்றார்.

இலக்கியப் பேச்சாளராகவும் திகழ்ந்த டி.எம்.பீ. பேராதனைப் பல்கலைக்கழகம், கொழும்பு விவேகானந்த மண்டபம் உட்படப் பல இடங்களில் தமது இலக்கியப் புலமையை வெளிப்படுத்தியிருந்தார். மேலும், இதழாசிரியராகத் திகழ்ந்த டி.எம்.பீ. மலையகத் தொழிலாளர் முன்னேற்றத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட **"நவஜீவன்"-** வார இதழின் ஆசிரியராக விளங்கியவர். ஆசிரியர் தலையங்கம், தோட்டச் செய் திகளூடாக தொழிலாளர் மத்தியில் எழுச்சியூட்டியவர்.

**"கிளர்ச்சியும் புரட்சியும் ஊட்டும் நண்பன்"-** பத்திரிகையின் ஆசிரியராகவும் விளங்கி, தோட்டத் தொழிலாளர்களுக்கு உணர்ச்சியூட்டியவர் டி.எம்.பீ. **"தாரகை"-** என்ற பத்திரிகையின் ஆசிரியராக இல்லாது விடினும், தாயகம் திரும்பும் வரை இலக்கியப் பங்களிப்பைச் செய்து வந்தவர்.

மேற்கூறிய விபரங்கள் பலவும் சற்று விரிவான முறையில் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவ்வாறே மலையகச் சிறுகதை முன்னோடிகளுள் ஒருவராக கணிக்கப்படுகின்ற டி.எம்.பீ.யையும் இந்நூல் அறி முகப்படுத்துகின்றது. பல சிறுகதைகளை இவர் வழங்கியிருப்பினும், ஆறு சிறுகதைகள் மட்டுமே **"சிறுகதைகள்-06"-** என்ற பெயரில் நூலுருப் பெற்றுள்ளன.

நாவலாசிரியலாகவும் திகழ்ந்த டி.எம்.பீ.யின் **"கங்காணியின் மகள்"-**

(1955) நாவல் பெயருக்கேற்ப தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை பற்றியும், **“சதியில் சிக்கிய சலீமா”-** நாவல் முஸ்லீம் மக்களது வாழ்க்கை பற்றியும் சித்தரிக்கின்றது.

டி.எம்.பீ.யின் சிறுகதை, நாவல் துறைப் பங்களிப்பைப் பற்றி முதல் இனங்காட்டிய கனக.செந்திநாதன் பற்றியும்(1964) தொடர்ந்து சில்லையூர் செல்வராஜன், தெளிவத்தை ஜோசப் மற்றும் அந்தனி ஜீவா முதலானவர்கள் குறிப்பிட்டமை பற்றியும், மேடைப் பேச்சுக்கள் பற்றி மு.சாயபுமரைக்கார், அஹமது மீரான் முஹம்மது ஆகியோர் முதன் முதலாக எடுத்துரைத்தமை பற்றியும் பாராட்டும், நூலாசிரியர் அவைகள் பற்றிக் குறிப்பிடாத ஈழத்து நாவல், சிறுகதை ஆய்வாளர்கள் பற்றியும் குறிப்பிட்டிருந்தால் நன்றாகவிருந்திருக்கும்.

விரிவாக எழுதப்பட்டிருக்க வேண்டிய நூல் என்பது தவிர, வேறு குறைகள் எவற்றையும் கொண்டிராத இந்நூலின் வரவு **“மூர்த்தி சிறிது, கீர்த்தி பெரிது”-** என்பதற்கு எடுத்துக் காட்டானது. தொடர் ஆய்வுகள் பலவற்றுக்கு இடமளிக்கின்றது.

டி.எம்.பீ. கவிஞர் என்று குறிப்பிடப்பட்டிருப்பினும் அது பற்றி மேலும் ஓரிரு வரிகளாவது இடம்பெற்றிருப்பின் நன்றாக இருந்திருக்கும். அத்தோடு மானா மக்கீன் அவர்களது கவனத்திற்கு முக்கியமானதொரு விடயம் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். டி.எம்.பீ.யின் சிறுகதைத் தொகுப்பு, நாவல்கள் கைவசம் இருப்பின் அவற்றை வெளிக் கொணர்ந்தால் இலங்கை இலக்கிய வரலாற்றில் அன்னாருக்குரிய இடம் மேலும் உறுதிப்படும் என்பதே!

தொடர் கட்டுரையை நூலுருவாக்கிய **“தமிழ்நாடு தாழை.மதியவன்”-** பாராட்டப்பட வேண்டியவர். எனினும், **“காட்டில் எரிந்த நிலா”-** என்ற பெயரிலுள்ள தவறு ஒரு நெருடல் மறுபதிப்பில் திருத்தப்பட வேண் டியது முக்கியமாகும்.

-கவிதை-

# அகிலம் போற்றும் தென்றல் வாழ்க!!!

-கவிஞர் க.ரெட்ணையா, கன்னன்குடா-

**வா**வியலையை தாவித் தழுவி
வந்து தென்றல் தாலாட்டும்
மட்டு.மாநகரின் பெருமை பாடி
அழகு இதழால் அமுதூட்டும்.. (வாவி..)

பதினைந்தாவது அகவையில் கால் பதித்து
அழகுடனே நடை பயின்று
எண்பது வயது தாத்தாவின்
இதயத்திலும் இடம் பிடிக்கும்.. (வாவி..)

தமிழே இனிமை தமிழே இன்பம்- என்று
தமிழின் புகழ் பாடும்
தமிழன் வாழும் இடங்களெல்லாம்
தான் சென்று நடமாடும்.. (வாவி..)

கவிதைகள் கட்டுரைகள் சிறுகதைகள் சுமந்து
கலைஞர்களைத் தென்றலின் தேடலினால் வெளிப்படுத்தி
புவியெங்கும் சுற்றி வரும் தென்றலினை
புயமேந்திப் போற்றி வரவேற்றிடுவோம்! (வாவி..)

இடையில் இவள் வருகை ஒருவருட காலம் தடைப்பட்டு-பின்
எழுந்து நடந்து தமிழின் அணிகலன்கள் அணிந்து கொண்டு
மதியெனவே மட்டு.நகர்தனில் உதித்து
மக்கள் மனங்களை கவர்ந்திழுக்கும்
இனிய தென்றலிவள் வருகை தொடரட்டும் பல்லாண்டுகள்!
(வாவி..)

-சிறுகதை-

# குடைக்குள் மழை!

-ஜெ.ஈழநிலவன்-

**“த**ம்பி கவனமாகப் போட்டு வா”

**“சரி அம்மா..”**

**“இங்க பார்.. இந்தப் பக்கத்தால் இருட்டிக் கொண்டு, வருது”–** என்று தாய் கூறவே, **“அது கொஞ்ச நேரம் தானம்மா இருக்கும். இப்ப மழைக்காலம் இல்லதானே..”–** என்று கூறியபடி நடந்தான் கமல்.

மீண்டும் அம்மாவின் சத்தம். **“தம்பி.. தம்பி.. நில்லு”–** திரும்பிப் பார்த்தபடி நின்றான். அம்மா கறுப்புக் குடையுடன் கதவை இழுத்து மூடிவிட்டு ஓடி வந்தார். அந்தக் குடையைக் கண்டதும் கமலுக்கு நெஞ் சில் **“பக்”–** என்றிருந்தது. அது ஒரு நீளமான குடை. நான்கு பேரை அடக்கிக் கொள்ளும் அதன் அகலம். மழை நாளில் அவன் தனியாக சென்றாலும், மழை அந்தக் குடையைத் தாண்டி அவனைச் சில மழைத் துளிகளால் நனைக்காமல் விட்டதில்லை. இப்போது அம்மா கையில் இருக்கும் குடை.

வெளியில் மழை இல்லை. ஆனால், அவன் மனதில் ஆலங்காட்டி மழையாய் அவள் பெயர் சொல்லி அடிக்கிறது.

குடையுடன் வந்த அம்மா **“இந்தா தம்பி, மழையச் சொல்ல முடியாது.. வந்தாலும் வரும். நனைஞ்சிராத”–** எனக் குடையை விரித்துத் தருவதற்காக எடுத்தாள். **“அம்மா, வேண்டாம். இப்ப மழையா பெய் யுது”–** என்றபடி குடையை வாங்கிக் கைகிலெடுத்து கடகட என்று நடந்தான்.

அதிகாலை எட்டு மணி இருக்கும். பிரத்தியேக வகுப்பு ஒன்றுக்குச் செல்வதற்கு அந்தப் பாதை வழியாக நடந்தான். கிறவலும், புழுதியுமாகக் கிடந்தது. நீண்ட நாட்களாக மழை பெய்யாததால் சாலை யின் இருபுறமும் இருந்த புதர், பற்றை எல்லாம் காய்ந்து போய் இருந்தது. அடிக்கடி வாகனம் போய் வருவதால் புழுதி பறந்து புல்லும், பற்றையும் சிவப்பு நிறமாகி விட்டது. அந்தத் தெரு வழியாக வரும் மாடுகள் அதையெல்லாம் முகர்ந்தபடி கடந்து செல்வதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

**“அடச்சீ.. பசுவும், கன்றும் என்ன பாடு படுது, அதுகளுக்கு எவ்வளவு பசயா இருக்கும்? புல் இல்லாட்டி என்ன செய்யும்?”-** என்று அவனுக்குள்ளேயே கேட்டபடி தலையைச் சொறிந்தான்.

கையில் இருக்கும் குடையைப் பார்த்தான். அது அவனை வெறித்துப் பார்ப்பது போல் இருந்தது. **“என்னை ஒரு தடவை விரித்து விடுங்கள்”-** என்று அதன் அசைவு காற்றிலே **“படபட”-** என்று சத்தமிட்டது.

**“மார்கழி வந்தால் உனக்கு ஒரு வயது. ஆனால், உன்னை எப்படி கவனமா வச்சிருக்கிறன்”-** இப்படிக் குடையோடு பேசுவதில் அவ்வளவு உற்சாகம் அவனுக்கு.

திடீரென வானம் கறுத்தது. மேகம் உருண்டோடியது. அவ்வளவு நேரமும் அவன் தலைக்கு மேல் ஒரு பறவை கூடப் பறக்கவில்லை. ஆகாயம் எங்கும் இருள் பரந்தவுடனே காகங்கள் கூட்டம் கூட்டமாகப் பறந்தன. இடுப்பில் துண்டைக் கட்டிக் கொண்டு கத்தரித் தோட்டத்தில் நின்ற முதியவர் சிரித்தபடி வானத்தைப் பார்த்தார். ஏதோ ஓர் அறிகுறியால் மழை வரும் என எண்ணி, உடனே போய்க் கத்தரிப் பாத்தி எல்லாம் தண்ணீர் பாய்வது போல் வெட்டி விட்டார்.

**“என்ன தம்பி, மழை வருமா?”-** முதியவர் கமலைப் பார்த்துக் கேட்டார்.

**“எனக்கு மழை வரும் என்பதில் நம்பிக்கை இல்லை. ஆனாலும்**

**கையில் குடையுடன் நிற்கிறீர்கள்"**- என்று முதியவர் கூறியவுடன் அந்த நீண்ட நினைவு பட்டென்று வந்தது.

அன்றும் அப்படித்தான். பின்னேர வகுப்பு முடிந்து வீட்டுக்குப் போகலாம் என நிற்கும் போது இதே போல் இருட்டிக் கொண்டு வந்தது. மழை வராது என்று நினைத்தவாறு நடந்து கொண்டிருக்கையில் எங்கிருந்தோ வந்த மேகக் கூட்டம் சுமார் மூன்று மணிநேரமாக **"சோவென"**- கொட்டித் தீர்த்துக் கொண்டிருந்தது.

பெய்த மழை முழுவதும் அவன் தலையில்தான். அவனுக்குக் குளிர் தாங்க முடியவில்லை. ஆனாலும் மழையில் நனைந்ததில் ஒரு மகிழ்ச்சி. அவ்வாறே நடந்து போய்க் கொண்டிருக்கையில் சிறிய, பெரிய வாகனங்களும் நனைந்தபடி அவனைக் கடந்தன. அந்நேரம் பார்த்து மிகவும் வேகமாக வந்த கார் கமலின் மீது தண்ணீரை வீசியபடியே கடந்தது. கண்களை மூடித் திறந்தபோது போன கார் பின் நோக்கி வந்து நின்றது.

அவனுக்கோ ஆச்சரியம். **"என்னடா! தண்ணி வீசிற்று எல்லோரும் தப்பித்துப் போவாங்க. இது என்னடா.. திரும்பி வந்து நிற்குது"**- என்று எண்ணினான். சடாரெனக் கதவு திறக்கப்பட்டது.

**"கமல், என்னடா இப்படி நனைந்து கொண்டு.. சொரிடா. கொஞ்சம் வேகமா வந்திட்டன்".**- அது யாருமல்ல. கமலுடைய சக மாணவி நிருத்திகாதான்.

**"உள்ள வா கமல்"**- என்றழைக்கவே கமல் மறுத்து விட்டான். பின்னர் **"இந்தா குடை"**- என்று கொடுத்தாள்.

**"சீ.. எதுக்குக் குடை? இன்னும் கொஞ்சத் தூரம்தான். நான் போயிடுவன். நீ போ நிருத்திகா".**

**"எனக்குக் கவலையா இருக்குடா. நான் வேற அவசரமா கொழும்புக்கு**

**போறன். நாளைக்கு லண்டன் போறன். உன்னப் பார்த்ததில் என்னவோ சந்தோஷமா இருக்குடா. இந்தா எண்ட ஞாபகமா இந்தக் குடையை வச்சிரு".**

என்ன செய்வதெனத் தெரியாமல் கமலும் சிரித்த முகத்துடன் வாங்கினான். தலையிலிருந்து வழிந்தோடும் நீர் சம்மதம் தெரிவிப்பது போல் இமையில் விழுந்து அசைந்து கொண்டது. வார்த்தைகளால் எதுவுமே பேசவில்லை.

**"சரிடா நான் போறன். திரும்பி வரும்போது உண்ட வீட்டுக்கு வருவேன்"–** என்று கூறிக் கார் கதவை மூடியதும், கார் வேகமாகச் சென்று மறைந்தது.

பிறகு வீட்டுக்குச் சென்று நடந்தவற்றை நினைத்து இரண்டு, மூன்று நாட்களாகத் தூக்கமில்லை. மனதில் ஏதோவொன்று சந்தோச ஊஞ்சலில் ஆடியது. அதற்குப் பிறகு மழை வந்தால் கூட, அந்தக் குடையை எடுப்பதில்லை. நாளாக நாளாக குடையின் ஞாபகம் இல்லை. இன்று அம்மா கொடுத்திருக்காவிட்டால், இந்த ஞாபகம் வந்திருக்காது.

பழையதை நினைத்துக் கொண்டு நின்றவனுக்குள்ளே நிருத்திகா வந்து மறைந்தாள்.

அவ்வளவு நேரமும் இருண்டிருந்த வானம் **"சோவெனப்"–** பொழிந்தது. காற்றின் அசைவில் மரங்கள் ஆட்டம் போட்டன. கமலுக்குக் குடையை விரிக்க மனசு வரவில்லை. நனைந்தாலும் அம்மா திட்டுவார் என்ற மனப்பயம். ஒரு நிமிடம் குடையை விரிப்பதும், சுருக்குவதுமாக இருந்தான். சுருக்கும் போது வந்து ஒட்டிக் கொள்ளும் மழைத்துளி மனதுக்கும், உடலுக்கும் இதமாக இருந்தது.

எவ்வளவு காலமாக எவ்வளவு தூரத்திலிருந்து வருகின்றன இந்த மழைக் குழந்தைகள். நனையாமல் விட்டால், நான் துரதிர்ஷ்டசாலி.

குடையை விரித்து எதிர்ப்பது, அவன் மனதுக்குச் சந்தோசமாக இருக்கவில்லை.

கமல் குடையை தூக்கி சுருட்டிக் கையில் எடுத்த படியே நடந்தான். வழியில் செல்பவர்கள் கமலைச் சிரித்தபடி பார்த்தார்கள். அவனும் சிரித்துக் கொண்டே நடந்தான். சிலர் நனையக் கூடாது என்பதற்காக மரங்களுக்குக் கீழே நின்றார்கள். மரக்கறி விற்பவர் தடபுடவென்று காய்கறிகளை அள்ளிக் கூடையில் போட்டார்.

அங்கு நின்ற ஒருவர் **"என்ன இந்த மழை. நேரங்கெட்ட நேரத்தில பெய்யுது"-** என்று அலுத்துக் கொண்டார். கமலுக்கும் கோபம் வந்தது. காலையில் வரும்போது நடந்த சம்பவமும் காட்சியும் நினைவுக்கு வந்தது. அந்தப் பசுவும், கன்றும் நல்லாச் சந்தோசப்படும். மூன்று நாளைக்கு அந்த ஏழைத்தாய் தண்ணி சுமந்து ஊத்தத் தேவையில்லை. மூன்று மணி நேரம் பெய்த மழையில் குளங்களும் நிரம்பியிருக்கும். சூரியன் மெதுமெதுவாக தெரிய ஆரம்பித்தான். வெயில் மெதுமெதுவாக பட, ஈரமும் மெது மெதுவாகக் காய்ந்தது.

நிலமும் மழை பெய்ததற்கான அடையாளம் இல்லாததைப் போல் ஈரமற்றுக் கிடந்தது. கமலின் ஊர் வரவே அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தான். மழை பெய்ததற்கான அடையாளமே இல்லை. கிறவல் பட்ட புல், வீதியோரங்களில் காணப்பட்ட கடதாசிகளைச் சாப்பிட்டுக் கொண்டு நின்ற பசு, வாடிப்போய் இருக்கும் பயிருக்கு இடுப்பில் தண்ணீர் சுமந்து ஊற்றும் ஏழைத்தாய்.. இவற்றையெல்லாம் பார்த்த கமலுக்கு கவலை வந்தது.

வீட்டுக்குப் போனவுடனே **"அம்மா.. அம்மா.. இங்கு மழை பெய்ததா?"-** எனக் கேட்டான்.

**"இல்ல தம்பி,ஏன்டா டவுணில் மழையா? அதுதானே குடை தந்து விட்டன்"-** என வெளியில் வந்து விரிக்காத குடையைப் பார்த்தான்.



பின்னர் **"அங்கவும் பெய்யலையா தம்பி? எப்ப நாங்க நினைக்கிற நேரம் பெய்திருக்கு?"**

கமல் அவசரப்பட்டான். **"இல்லம்மா அங்க நல்ல மழை. நானும் நல்லா நனைஞ்சிட்டன். ஆனா காஞ்சிற்று"-** என்று குடையை விரித்து உதறினான். அதனுள் ஒளிந்திருந்த ஓரிரு மழைத்துளிகள் அவளின் முகத்தில் பட்டன.

**"ஐயோ..! இங்க எல்லாம் பெய்யுதில்லையே.."-** என்று குடையைப் பார்த்துச் சொன்னாள்.

மழை தன் மொழியால் ஏதோவொன்றைச் சொல்கின்றது. மழை விரும்பிகளுக்கு..!

-கவிதை-

# கொடிது கொடிது கொவிட்-19

-கவிதாயினி வாசுகி குணரத்தினம்-

**கொவிட்:19 தொற்று**
**கொடுமையான தொற்று**
**பாவம் என்ன செய்தோம்**
**பரிதவிப்பு நாளும்!**

**மாறி வரும் மண்ணில்**
**மடிந்து விடும் வழிகள்**
**கோடி கோடி என்று**
**குவிகிறது பாரீர்!**

**புதுவிதமாய் உலகை**
**பூட்டி வைத்து விட்டாய்**
**முகக் கவசம் போட்டு**
**முழுவதையும் மறைத்தாய்!**

**நெருக்கம் அற்றுப் போச்சு**
**நடுக்கம் கூடிப் போச்சு**
**உயிரைக் கையில் பிடித்து**
**உலவும் காலம் ஆச்சு!**

**இடைவெளிகள் எடுத்து**
**இருக்கப் பழக வேண்டும்**
**உடைகளால் கூட**
**உருவாகி விடும் தொற்று!**

**எப்போது நீங்கும்**
**இந்த நோயின் தாக்கம்**
**அந்நியத்தைப் போக்கி**
**அருகில் எப்போ இணைக்கும்!**

# அரங்கேறிய நிகழ்வுகள்!

க.தர்மா

## மட்டக்களப்பு சினிமாத்துறையில் புதிய பரிணாமமாக

# எனக்குள்ளே

## திரைப்படம் அமையும்!



மட்டக்களப்பின் வர்த்தகச் சினிமாத் துறையின் புதிய அத்தியாயமாக **"எனக்குள்ளே"** திரைப்படம் அமைந்துள்ளது. இரு நண்பர்களுக்கிடையிலான பாசப்பிணைப்பு, அதனால் வரும் இன்பம்- துன்பம், பிரிவு, உயிரிழப்பு எனக் கதை நகரும் விதம் அருமை. இந்திய சினிமாவிற்கு எங்களாலும் ஈடு கொடுக்க முடியுமென்பதை படத் தயாரிப்பாளரும், மட்டக்களப்பு மாவட்டச் சுகாதார சேவைகள் பணிப்பாளருமான வைத்திய கலாநிதி கு.சுகுணன் மற்றும் படக்குழுவினர் புரியவைத்திருக்கின்றனர்.



இத்திரைப்படத்தின் இயக்குனர் குழந்தைவேல் கோடீஸ்வரன், இசையமைப்பாளர் பொறியியலாளர் கேசாந்த் குலேந்திரன் மற்றும் நடிகர், நடிகைகளின் அயராத அர்ப்பணிப்பு வெளிப்படுகின்றது.

இத்திரைப்படம் 50 நிமிடங்கள் அனைவரையும் ஆக்கிரமித்திருந்தது. இக்கதையில் வைத் தியர்களாக நடிக்கும் வைத்தியர்களான



கலாநிதி கு. சுகுணன் மற்றும் கே. அருளானந்தம் ஆகியோர் கதையை நகர்த்திச் செல்லும் பாங்கு அருமையிலும் அருமை!

உடல் உறுப்பைத் தானம் செய்தல் என்பதைக் கருப்பொருளாகக் கொண்டு உருவாகியுள்ள **"எனக்குள்ளே"**- திரைப் படத்தில் பிரசார விடயங்களுக்கு முக்கியத் துவம் கொடுக்காமல், கதையை நகர்த்திச் செல்வதில் இயக்குனர் குழந்தைவேல் கோடீஸ் வரன் வெற்றி பெற்றுள்ளார்.




மாற்றம் என்பது எம்மிலிருந்தே உருவாக வேண்டும். இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக இத்திரைப்படம் அமைந்திருக்கின்றது. இதில் பங்கேற்ற 16 பேரும் தமது கண்களைத் தானம் செய்வதற்கான சான்றுப் பத்திரம் படத்தின் பாடல் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வின் போது, படத் தயாரிப்பாளரும், விஷேட வைத்திய நிபுணருமான கு. சுகுணனால் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக வழங்கப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முரு.சேமகரன் எழுதிய "செம்பொருளே செந்தமிழே"

## நூல் வெளியீடு!



கல்லடி உப்போடை ஸ்ரீ சித்திவிநாயகர் சைவசித்தாந்த சன்மார்க்க சபை நடாத்திய சைவப் புலவர் முரு. சேமகரனின் **"செம்பொருளே செந்தமிழே"**- எனும் நூலின் வெளியீட்டு விழா 25.03.2022 அன்று மட்டக்களப்பு கல்லடி துளசி மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்லடி கல்வி அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி. தேவசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மங்கல விளக்கேற்றப்பட்டு, திருமுறைப் பண்ணிசை சிவயோகச் செல்வன் சாம்பசிவத்தால் அருளப்பட்டு, வரவேற்புரை மற்றும் தலைமையுரையுடன் நிகழ்வு ஆரம்பமானது.

இதன்போது வெளியீடு செய்யப்பட்ட **"செம்பொருளே செந்தமிழே"**- நூலுக்கான அறிமுகவுரையினை முன்பள்ளி ஆசிரியையும், சிரேஷ்ட எழுத்தாளருமான திருமதி சுந்தரமதி வேதநாயகம் நிகழ்த்தினார். அவர் தெரிவித்ததாவது:-



சித்தாந்த சைவ இலக்கிய அம்சங்களையும், தமிழ் இலக்கண வடிவங்களையும் கொண்ட நூலாக



இந்நூல் பிரசவமாயிருக்கின்றது. இந்நூலுக்கு பல்வேறு மதப் பெரியார்களின் ஆலோசனைகள் அணி சேர்த்திருக்கின்றன. இன்றைய காலகட் டத்தில் சைவசமயக்கல்வி அருகிக் கொண்டு செல்கின்றது.

இந்நிலையில் இந்நூலின் வரவானது பல்கலைக் கழக மாணவர்கள், உயர்தர மாணவர்கள் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ளோருக்கு அடித்தளமாக அமையுமென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

சைவமும், தமிழும் எமது இரு கண்கள். இந்நிலையில், இரு கண்களும் இணைந்தால் தான் முழுமை பெறும். இவை இரண்டையும் இணைக்கும் பாலமாக **“செம்பொருளே செந்தமிழே”-** வெளி வந்திருப்பது எமக்குக் கிடைத்த அரும்பெரும் பொக்கிஷம் என்றார்.



நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் உரையாற்றுகையில் தெரிவித்த தாவது:-

சைவம், தமிழ் ஆகிய இரண்டும் உலகில் மிகவும் தொன்மையானவை. எந்த ஆய்வினை மேற்கொண் டாலும், அதன் முடிந்த முடிவாக இருப்பது சைவமும், தமிழும்தான். உலகிலுள்ள அனைத்து மொழிகளிலும் தமிழ்ச் சொற்கள் கலந்திருப்பது கண்கூடு.

இந்நிலையில் தூய்மையான- தொன்மையான சைவமும், தமிழும் கொண்ட பாரம்பரியத்தில் நாம் பிறந்து வாழ்வது பெரும் பாக்கியமே. அந்த வகையில் தமிழின் தொன்மையையும், ஆழமான கருத்தையும்





இன்றைய தலைமுறையினர் மறந்து போகின்ற நிலையில் சைவப்புலவர் முரு.சேமகரனின் படைப்பு வெளிவருவது வரவேற்கத்தக்கது.

தமிழும், சைவமும் இந்தியாவின் தென்னிந்தியாவிலும், இலங்கையிலுமே மட்டுப்படுத்தப்படுகின்றன என்ற நிலையில், எமது தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து உலகமெல்லாம் பரந்து சைவத்தையும், தமிழையும் பரப்பிக் கொண்டிருக்கின்றனர். அத்தோடு எமது கலாசாரத்தையும் அங்கே விதைத்துக் கொண்டிருக்கின்றனர்.

சைவசமய வழிபாட்டு முறைகள் அத்தனையுமே விஞ்ஞானத்துடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. கோவில் அமைப்பு, கர்ப்பக்கிரக அமைப்பு, தளம் மற்றும் அர்த்த மண்டபம் ஆகியன எமது உடல் தொழிற்பாட்டுடன் தொடர்புடையவை. இது ஆய்வுகள் ஊடாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றது என்றார்.

நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களால் நூலாசிரியர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

-கவிதை-

# சித்திரைப் புத்தாண்டு..?

-அருட்பாவலர் நிலா தமிழின்தாசன், நிலாவெளி-

சித்திரை மலர்ந்து மணக்கிறது- மக்கள்
சிந்தையில் துயரங்கள் கணக்கிறது..
நித்திரை, உறக்கம், உணவிழந்து- மக்கள்
நிரையாய்த் தெருக்களில் வாடுகின்றார்
புத்தமகானது பொற்பாதம்- அன்று
புதித்த புனித பூமியிது
நித்தியத் துயரில் சுழல்கிறதே- இந்த
நிலையினில் மாற்றம் பிறக்காதா?

புத்தாண்டதனைக் கொண்டாட- இந்தப்
பூமியில் இன்றென்ன பொருட்களுண்டு!
சத்தாய் அரிசி, கற்கண்டு- கலக்கச்
சர்க்கரை, சீனி, பழச்சேர்க்கை
சித்தம் மகிழும் வகைப் பொருட்கள்- நிறைவாம்
சீ! இங்கு எதுவும் கிடைக்காது,
நித்தம் வீடுகள் கடுமிருட்டில்- இங்கு
நீழும் இருட்டு மின்தடையால்!

மண்ணெண்ணெய், பெற்றோல், எரிவாயு- இங்கு
மக்கள் பெற்றிடத் தேடி அலைகின்றார்
பண்ணை வயல்கள் மரக்கறி செய்- நீர்ப்
பம்புகள் இறைக்க "டீசல்" இன்றி
கண்கள் கலங்கித் துடிக்கின்றார்- மக்கள்
கடுந்துயர் தன்னில் தோய்கின்றார்..!
புண்படும் துயரில் மக்கள் எலாம்- நொந்து
புலம்பிடும் நிலையிற் புத்தாண்டா..!

-சிறுகதை -

# ஏமாற்றுக்கருவி!

-வி.ஆர்.ஜபர்தீன் -



**வா**னத்தைப் பார்த்தபடி மல்லிகா, தன்னுடைய இந்த 23 வயதில் வாழ்க்கையைத் தொலைத்து விட்டதை நினைத்து, பழைய நினைவுகளை நினைவுபடுத்துகின்றாள்.

தங்கைகள் இருவருடன் பிறந்தேன். அம்மா கிராமத்திலேயே எங்களைப் பார்த்துக் கொண்டிருக்க, அப்பா நகரத்தில் வியாபாரத்தை நடாத்தி வந்தார்.

மூவரும் ஒரே பாடசாலையில்தான் படித்தோம். காலம் செல்ல மூவரும் வளர்ந்து பருவமடைந்தோம். எங்களைக் காதலிக்கப் பலரும் முயன்றனர்.

அச்சமயம் சஞ்சய் காதல் வலையில் எப்படியோ விழுந்து விட்டேன். இருவரும் காதலிக்கத் தொடங்கினோம். அப்பா அடிக்கடி வீட்டுக்கு வராததால், எங்கள் காதல் தங்கு தடையின்றி வளர்ந்தது.

சஞ்சய் தொழிலொன்றைத் தேடிக் கொள்வதாகவும், அதன் பின்னர் திருமணம் செய்யலாம் என்று கூறினான்.

நான் நம்பிய அளவுக்கு அவன் நல்லவனே இல்லை. அவன் நகரத்தில் வளர்ந்தவன். ஏற்கனவே ஒரு பெண்ணைக் காதலித்து, கர்ப்பமாக்கி விட்டு, தப்பி வந்தவனே அவன். மாமாவின் உதவியால் கல்லூரியில் கல்வி கற்றுக் கொண்டிருந்தான். இவையனைத்தையும் பின்னரே நான் அறிந்தேன்.

ஒரு நாள் சஞ்சய் **"இருவரும் எங்கேயாவது போய் வருவோம்.."–** என்று அழைத்தான். ஆரம்பத்தில் போக மறுத்த நான், பின்னர் இணங்கினேன்.

மரண வீடொன்றுக்குப் போவதாக அம்மாவிடம் கூறிவிட்டு, சஞ்சயிடம் சென்றேன். அப்போது அவனும் அவனுடைய நண்பனும் இருந் தார்கள்.

**"யார் இது?"–** என்று கேட்டேன்.

**"நண்பன்தான்"–** என்று கூறினான்.

எனக்குப் பயமாக இருந்தது. ஆனாலும், துரோகம் செய்ய மாட்டான் என்று நினைத்து, உல்லாச விடுதியொன்றுக்கு மூவரும் சென்றோம். குளிர்மையும், தனிமையும் எனக்கு புதுவித இன்பத்தை உணர்த்தியது. மிகவும் சந்தோசமாக அந்த இரவைக் கழித்தோம்.

வாழ்வைச் சுக்குநூறாக்க சில நிமிடங்கள் போதுமென்று அறியாத நான் சஞ்சயுடன் சந்தோசமாக இருந்து விட்டேன். ஆனால் அவர்கள் இருவரும் போட்ட திட்டத்தை நான் அறிந்திருக்கவில்லை. குடிக்கத் தொடங்கினார்கள். எனக்கும் மயக்க மருந்து கலந்து குடிக்கக் கொடுத் தார்கள்.

அதன் பின் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. காலையில் நான் எழுந்து பார்த்த போது, ஜெயராஜ் என் பக்கத்தில் இருந்தான். அவனைக் காணவில்லை.

சஞ்சய் எங்கே என்று கேட்டுக் கதறி அழுதேன். ஜெயராஜ் என் வாயைப் பொத்தி விட்டு, **"சஞ்சய், உன்னை என்னிடம் ஒப்படைத்து விட்டுப் போய் விட்டான். இனி வரமாட்டான்"-** என்று கூறி, என்னை அவன் விரும்பிய மாதிரிப் பயன்படுத்திக் கொண்டான். என்னால் அவனுக்கு இணங்குவதை விட, வேறு வழி தெரியவில்லை. என்னை அவன் ஜெயராஜிடம் விட்டு விட்டுச் சென்ற பின், அவன் ஒருவாரம் என்னை வைத்து விட்டு, பின் 50,000 ரூபாவுக்கு ஒரு கோட்டலுக்கு என்னை விற்று விட்டான்.

என்னால் யாரையுமே நம்பமுடியவில்லை. ஆண்களின் கண்ணீர் மாயமானது. அது பெண்களை ஏமாற்றும் ஒரு கருவி மட்டுமே. செடியில் இருக்கும் வரைதான் பூவுக்கு அழகு. அதை கொய்த பின் இறைவன் காலடிக்குப் போகுமா? கயவன் கைக்குப் போகுமா? என்று யாருக்கும் சொல்ல முடியாது. என் விதி இதுதான். யாரை நொந்தும் பயனில்லை!

**"தென்றல்" இன் தொடர் வருகைக்குத்**
**தங்களால் இயன்ற நிதிப் பங்களிப்பை நல்குங்கள்.**
**-ஆசிரியர்-**



– நீத்தார் நினைவு –

## சமூக, சமயப் பணிகளில் தன்னை அர்ப்பணித்த அமரர் சின்னவப்போடி கிருஷ்ணபிள்ளை!

பழுவூரான்


மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலுள்ள கன்னன் குடாவில் பிறந்து, கலை, சமூகப்பணி, ஆன்மீகம் என பல்வேறு துறைகளிலும் தன்னை ஈடுபடுத்திச் செயற்பட்ட ஒருவராக அமரர் சின்னவப்போடி கிருஷ்ணபிள்ளை திகழ்ந்தார்.

கிராம அபிவிருத்தியிலும், சமூக சேவைகளிலும், கலை நிகழ்வுகளிலும் இயல்பாகவே ஆர்வம் கொண்டிருந்த இவர், பல்வேறு சமூக அமைப்புக்களில் பொறுப்பான பதவிகளையும் வகித்துள்ளார். அத்தோடு கிராமத்து இளைஞர்களை ஒன்று கூட்டி கிராமத்தின் அபிவிருத்திப் பணிகளை மேற் கொண்டதோடு, கூத்து, நாடகம் போன்ற கலைத்துறையில் தனது அதீத ஆற்றலை வெளிப்படுத்தினார்.

இவரின் கூத்தாடும் திறமையை வெளிப்படுத்தும் நிகழ்வாக 1964/1965 காலப்பகுதியில் பழகி அரங்கேற்றம் செய்த **“மகாபாரதம் 17 மற்றும் 18 ஆம் போர்”**- அமைந்தது எனக் கூறினால் அது மிகை யாகாது. இதில் வடமோடிக் கூத்தில் பிரபலமான நடிகர்கள் பங்கேற்று நடித்திருந்தனர். இக்கூத்தானது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல்வேறு பிரதேசங்களிலும் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆன்மீக நெறியில் ஈடுபாட்டைக் கொண்டிருந்த இவர், 12 வருடங்கள் கன்னன்குடா கண்ணகையம்மன் ஆலயப் பூசகராக இருந்து பணி புரிந்தமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு இந்துசமய விருத்திச் சங் கத்தின் மூலம் நவராத்திரி- சிவராத்திரி விழாக்கள், கண்ணகையம்மன் ஆலய வருடாந்த சடங்கு போன்ற வருடாந்த நிகழ்வுகளின் போது சமய சரித்திர நாடகங்களை அரங்கேற்றியுள்ளார்.

இவ்வாறாக கலை, இலக்கிய, சமூக, ஆன்மீகத் துறைகளில் தடம்பதித்த அமரர் சின்னவப்போடி கிருஷ்ணபிள்ளைக்குத் **“தென்றல்”** - தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.



# புதிய வரவு

நூல் :— ஊர் சுற்றிப் பாடுவோம் கும்மி

ஆசிரியர்: **“வீசுதென்றல்”**தாழை.செல்வநாயகம்

**இ**ந்த உலகத்தை— இந்த வாழ்க்கையை— இந்த மனிதர்களை சாதாரண ஒருவன் பார்க்கின்ற பார்வைக்கும் ஒர் எழுத்தாளன் பார்க்கின்ற பார்வைக்குமிடையே நிறைய வேறுபாடுகள் காணப்படு கின்றன. அந்த வகையில் பல்வேறு விருதுகளால் கௌரவமளிக் கப்பட்டுள்ள தாழை.செல்வநாயகம் தனது பன்முக ஆற்றல் காரண மாக பல தரம்மிக்க படைப்புக்களை வெளிக் கொணர்ந்துள்ளார். இதன் தொடர்ச்சியாக இந்நூல் பல்வேறு தடைகளுக்கு மத்தியில் எம் கரம் கிட்டியுள்ளது.

மட்டக்களப்பின் பாரம்பரிய கலைகளில் ஒன்றான கும்மி என்பது காலத்தால் அழியாது தொடர்ந்து கொண்டிருக்கும். இவ்வகையில் இவரது இலக்கியப் படைப்பானது மட்டக்களப்பிலுள்ள பல்வேறு பிரதேசக் கோயில்களின் பெருமைகளைக் கும்மி ஊடாக பக்திரசம் சொட்டச் சொட்ட வடித்துள்ள பாங்கு தாழை.செல்வநாயகத்துக்கே உரித்தானது.

அத்தோடு இவ்ஊர் சுற்றுக் கும்மியானது அவரின் தொழில்சார் புலம் பெயரும் ஊர்களின் சிறப்புக்களை தனது பேனாவின் துணை கொண்டு முழுப்பிரசவமாக படைத்திருக்கிறார். இவரின் மேலும் பல தரமான படைப்புக்கள் வெளிவர வேண்டுமெனத் **“தென்றல்”-** மனம் திறந்து வாழ்த்துகின்றது!

# வாசகர் நெஞ்சம்

மட்டு. மண்ணிலிருந்து பல தடைகள் தாண்டி வெளிவரும் தென்றலுக்கு என் இதமான நல்வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சஞ்சிகையொன்று தொடர்ந்து பயணிப்பதென்பது மிகவும் சிக்கலான விடயமாகும். ஏனெனில் நிதிப் பிரச்சினை, ஆக்கம் சேகரிப்பதில் பிரச்சினை, விநியோகப் பிரச்சினையென அடுக்கிக் கொண்டே போகலாம்.

இன்றைய பொருட்களின் விலை அதிகரிப்பினை **"தென்றலும்"**- எதிர்கொண்டிருக்கும் என எண்ணுகையில் கவலையாகவுள்ளது. தொடர்ந்து வெளிவந்து தமிழர் வாழும் பட்டி, தொட்டி எங்கணும் வலம் வரும் உனது வரவு நிட்சயம் எமக்குத் தேவை.

இந்நிலையில் பணவசதி படைத்தோர் மற்றும் புலம் பெயர்ந்து வெளிநாட்டிலுள்ள எம் உறவுகள், எழுத்தாளர்கள் **"தென்றல்"**– தொடர்ந்து வீச வழிசெய்திட வேண்டுமென்ற தாழ்மையான வேண்டு கோளை இவ்வேளையில் விடுக்கின்றேன்.

உனது வரவால் கட்டுரை, கவிதை, சிறுகதை, தென்றலின் தேடல், புதிய வரவுகள், நீத்தார் நினைவு ஊடாக பல அரிய பொக்கிஷங்களையும், பயனுள்ள அம்சங்களையும் அறிய முடிகின்றது. எமது வீட்டிலுள்ள வயது வந்தோர் முதல் இளையவர்கள் வரை வாசிக்கும் ஒரே சஞ்சிகையாகவும் தென்றல் உள்ளதை இவ்வேளையில் வாசகர் நெஞ்சம் ஊடாகப் பதிவு செய்து கொள்ள விரும்புகின்றேன்.

எந்நிலையிலும் தென்றலே உனது வரவு அமைந்திடட்டும்!

உன் இனிய வாசகி
ம.சங்கீத்தா
யாழ்ப்பாணம்.






காந்தள் அச்சகம்
புதுக்குடியிருப்பு
0652226722 /754300273